[5th July 1952

reclassified according to the size, importance and position of commanding view in the market and reasonable rents be fixed accordingly?"

THE HON. SRI N. SANKARA REDDI :—" Sir, it is the look-out of the panchayat board and I think the panchayat board will be fair in that respect."

SRI T. PURUSHOTHAMA MUDALIAR:—" Sir, will the Hon. Minister be pleased to convey this suggestion to the panchayat board through the Inspector of Local Boards and Municipal Councils?"

THE HON. SRI N. SANKARA REDDI :—" Certainly, Sir."

*Functions of the Efficiency Officers in the Revenue Department.*

* 19 Q.—SRI T. PURUSHOTHAMA MUDALIAR: Will the Hon. the Minister for Land Revenue be pleased to state—

(a) what the duties of Efficiency Officers working under District Collectors in the Revenue Department are;

(b) how many such Efficiency Officers are working in each district;

(c) whether the duties of the Efficiency Officers cannot be performed by the regular Divisional Officers; and

(d) whether the abolition of these posts is being considered?

THE HON. SRI M. A. MANICKAVELU NAICKER :—

" (a) The Efficiency Officers maintain close personal watch over the progress of execution of Intensive Cultivation Schemes. They also verify in the course of their tours whether the village and taluk registers prescribed by the Commissioner of Food Production for localisation of extents receiving Grow More Food benefits and for assessing the results under each scheme are properly maintained. They themselves verify the results in as many cases as possible and see that the karnam's estimates of production include the additional production that should have been realised under the various Intensive Cultivation Schemes. They also attend to all items of work under the various well subsidy schemes, which were previously discharged by the former Special Deputy Collectors for Wells. The Efficiency Officers submit their notes of inspections, if any, to the District Collectors concerned.

The Efficiency Officers are working directly under the Commissioner of Food Production, Madras, and are subject to his administrative control and supervision and not under the District Collectors.

" (b) There are eight Efficiency Officers in the State each in charge of 2 to 4 districts.

5th July 1952]

"(c) The Revenue Divisional Officers can perform those duties to a certain extent, but they will not be able to devote such close and constant attention to those duties as the Efficiency Officers can.

"(d) Yes. The question of abolition is being considered."

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—GOVERNMENT BUSINESS.

### GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1952–53—*cont.*

* **SRI O. P. RAMASWAMI REDDIAR**:—"கனம் தலைவர் அவர்களே, இப்பொழுது இந்தச் சபை முன்பு வரவு செலவு திட்டத்தைப்பற்றி சர்ச்சை நடந்துக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, வரவு செலவு நன்றாக நடத்தப் படவேண்டுமென்றால் அரசாங்கம் ஸ்திரமானதாக இருக்கவேண்டும். அரசாங்கம் ஸ்திரமானதாக இருக்கவேண்டுமென்றால், எல்லோரும் ஒத்துழைத்து, நாட்டிலுள்ள ஜனங்களுக்குச் செய்யவேண்டிய தொண்டை சரியாக செய்வதற்கு நாம் எல்லோரும் தயாராக இருப்பது உசிதமானது.

"சென்ற இரண்டு மாதங்களாக புது அரசாங்கம் இங்கு நடந்துவருகிறது. புது அரசாங்கமானது இந்த மாகாணத்தில் எந்தச் சூழ்நிலையில் வந்தது என்பதைப்பற்றி நான் சொல்லவேண்டாம். நாட்டில் ஏழ்மை, பசிப்பிணி இவைகளெல்லாம் அதிகமாகத் தாண்டவமாடுகிறது. இந்த நிலைமையில் காங்கிரஸினுடைய செல்வாக்கு கொஞ்சம் குறைந்திருக்கின்றன. சமீபத்தில் நடந்த தேர்தலில் வேறு கட்சிகளும் தோன்றி, அவர்களும் இந்த நாட்டு நிர்வாகத்தில் பங்கு கொள்ளவேண்டுமென்ற முறையில் சட்டசபையில் வந்திருக்கிறார்கள். ஆனாலும், சட்டசபையிலே சர்ச்சைகள் நடப்பதைப் பார்த்தால், த்வேஷம் அதிகமாக இருக்கிறதேயொழிய, மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டிய முறையிலே சட்டசபையிலே சர்ச்சைகள் நடப்பதாகத் தெரியவில்லை. நாட்டில் பஞ்சமும், பசிப்பிணியும் ஒரு புறமிருக்க, இயற்கையும் ஒத்தாசை செய்யவில்லை. இந்தச் சூழ்நிலையில் அரசாங்கத்தை நடத்துவது ரொம்ப கஷ்டம். யார் அரசாங்கத்தை நடத்தினாலும் எந்தக் கட்சியார் அரசாங்கத்தை நடத்தினாலும், அங்கத்தினர்கள் அதிகமாகக் கோபம் கொள்ளாமல், தகுந்த முறையில் நடத்தினால்தான் முடியும். அதிலும் குறிப்பாக, அரசாங்கத்தை நடத்தும் கட்சி இன்னும் அதிக பொறுமையாக இருக்கவேண்டியிருக்கிறது. அப்படியில்லாமலிருந்தால் ஆளும் கட்சி எதைப் பேசினாலும்கூட, எதிர் கட்சியாளர்கள் அதை வேறு விதமாக அர்த்தம் செய்துகொண்டு அதிக கோபத்தை உண்டுபண்ணி தாக்குதலில் இறங்கிவிடுகிறார்கள். இந்தச் சூழ்நிலையில் நாம் அரசாங்கத்தை நடத்தவேண்டுமென்றால், எதிர்க் கட்சியாக இருந்தாலும் சரி, அரசாங்கத்தை நடத்தும் கட்சியாக இருந்தாலும் சரி, சரியாக அரசாங்கத்தை நடத்தமுடியுமா என்று யோசிக்கவேண்டும். என் இதைச் சொல்லுகிறேன் என்றால் வரவு செலவு சரியாகக் நடக்கவேண்டுமென்றால், ஸ்திரமான அரசாங்கம் இருக்க வேண்டும். ஸ்திரமான அரசாங்கம் இருந்தால்தான் மக்களுக்கு நன்றாகச் சேவைசெய்யமுடியும். மக்களுக்கு நன்றாகச் சேவை செய்தால்தான் அவர்களுடைய கஷ்டங்களை நிவர்த்திக்கமுடியும். அவர்களுடைய கஷ்டங்கள் நீங்கினால்தான் இந்த நாட்டில் சுபிட்சமும் க்ஷேமமும் உண்டாக முடியும். இவ்விதமாக எந்தக் கட்சியாக இருந்தாலும், அவரவர்கள் செய்யவேண்டிய கடமையைச் செய்யாவிட்டால் அவர்கள் மக்களுக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்ய தவறியவர்களாவார்கள்.

"இங்கே சட்டசபையில் நாம் பிரதிநிதித்துவம் வகிப்பது நமக்காக மாத்திரம் அல்ல, நம்முடைய கட்சிக்காக மாத்திரம் அல்ல. இங்குள்ள அங்கத்தினர்கள் தனியாகவோ கூட்டாகவோ எல்லா ஜனங்களுக்கும் நாம் ஜவாப்தாரி என்பதை மறந்து விடுகிறோம். ஆகையினாலே, இந்த நிலையில் நாம்